"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, ஏற்கப்பட்டது.

(இ) வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1993). மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

****மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1993 @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி. திரு. ஜி. பழனிசாமியும் பேச வேண்டுமென்றால் பேசலாம்.

பிற்பகல் 1 .15

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விளைபொருள்களுக்கு தனி அலுவலர்களை நியமிக்கின்ற சட்ட முன்வடிவை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள்

@ 30-12-1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கொண்டு வந்திருக்கின்றார்கள். குறிப்பாக, இதுபோன்ற ஒழுங்குமுறைமார்க்கெட் கமிட்டிகள், விவசாயிகளுக்கு விலை நிர்ணயிக்கிற அந்த கூட்டுறவு அமைப்புகள் இன்றைய தினம் முழுமையாக அதற்குரிய பணிகளைச் செய்வதில்லை. காரணம் என்ன என்று சொன்னால், எந்த அலுவலர்களும் அந்த மார்க்கெட் கமிட்டியில் விலையை நிர்ணயிப்பதில்லை. விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே இன்றைய தினம் விலை நிர்ணயிக்கிற நிலை என்பதே முற்றிலும் இல்லாத ஒரு நிலைதான் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய புன்செய் தானியங்களாக இருந்தாலும், பல்வேறு தானியங்களாக இருந்தாலும், தனியார், வியாபாரிகளிடத்திலே நிர்ணயிக்கிற விலைக்குத்தான் அவர்களிடத்திலேயும் விற்பனை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையால், இதுபோன்ற அமைப்புக்களை அதிகாரிகள் முழுமையாகச் செய்ய முடியாமல், வியாபாரிகளுக்கு பல இடங்களில் துணைபோகக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அதிகாரிகளினுடைய பதவி உயர்வு 4 ஆண்டுக்காலம் உயர்த்துவது சரியல்ல. 3 ஆண்டாக இருக்க வேண்டுமென்று நான் இதிலே கருத்து கூறி அமைகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி இப்போது தனது கருத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறார். திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே தனி அதிகாரிகளுடைய கட்டுப்பாட்டிலே அவை இருக்கின்ற காரணத்தினால், அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில்—விவசாயிகளுக்கு, அவர்கள் தங்களுடைய விளைபொருள்களை, இடைத்தரகர்கள் இல்லாமல் விற்பனை செய்வதற்கு அங்கே நல்ல அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, இன்றைக்கு கோவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருப்பூர் காட்டன் மார்க்கெட்டை எடுத்துக் கொண்டால், அந்த காட்டன் மார்க்கெட் முழுமையும் இன்றைக்கு தனிப்பட்ட அந்த வியாபாரிகளே பல்லாண்டு காலமாக தங்கள் அமைப்பிலே வைத்துக் கொண்டு, அந்த மார்க்கெட் கமிட்டிக்கும் அதிக வாடகை கொடுக்காமல், திருப்பூரில் ஒரு சதுர அடி 5 ரூபாய் என்று இருக்கும்போது, வெளியிலே மிகவும் முக்கியமான ஒரு இடத்திலே மெயின் ரோட்டிலே, இருக்கிற அந்த காட்டன் மார்க்கெட்டுக்கு ஒரு சதுர அடிக்கு 5 பைசா, 10 பைசா என்று வாடகை கொடுத்துக் கொண்டு, அரசாங்கத்திற்கும் வருமானம் வராமல், மார்க்கெட் கமிட்டிக்கும் வருமானம் வராமல், விவசாயிகளும் தங்கள் பொருள்களை நேரடியாக விற்பதற்கு இடையூறாகவும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி இடையூறாக இருக்கிற அந்த மார்க்கெட் கமிட்டி மூலமாக, விவசாயிகளுக்கு

நல்ல பல நன்மைகளைச் செய்வதற்காக போடப்பட்ட அந்த மார்க்கெட் கமிட்டியிலே இருக்கிற அந்த வியாபாரிகளுக்கு அதிக அளவிலே வாடகையை உயர்த்திப் போட்டு, அந்த மார்க்கெட் கமிட்டிக்கு வருமானத்தைப் பெருக்க வேண்டும். இன்றைக்கு அவர்கள் விவசாயிகளிடத்திலே, 'செஸ்' வசூலித்துக் கொண்டு—மார்க்கெட் கமிட்டியினர், பல பொருள்களை வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்கிறபோது, 'செஸ்' வசூலிப்பது என்ற பெயரால், அவற்றைத் தடுத்து, அவர்களை நீண்ட நேரம் காக்க வைப்பதால், அந்த விளைபொருள்கள் வெளி இடங்களுக்குச் செல்வதை, குறிப்பாக சென்னை போன்ற நகரங்களுக்கு காய்கறிகளை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி, ஏதோ கேட்க வேண்டுமென்கிறார். திரு.வெ.பழனிசாமி.

* *திரு. வெ .பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஒழுங்குமுறைக் கூடத்தில் அங்கே இருக்கிற வியாபாரிகள் இடைத்தரகர்கள் என்ற பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கே கமிஷன் மண்டி என்பது, அங்கே இருக்கிற கிடங்குகளையும், கடைகளையும் வாடகைக்கு எடுத்து, முறையாக வாடகையைச் செலுத்தி, வியாபாரிகளுக்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும், விவசாயிகளுக்கும் ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டாவது, கோவை மாவட்டத்தில் அப்படி செயல்படுவதன் மூலமாக அந்த மாவட்டத்தில் அதிகமாக 'செஸ்' வரி, அதாவது வருடம் ஒன்றுக்கு 70 லட்சம் ரூபாய்வரை, அந்த திருப்பூர் விற்பனைக்கூடத்திலேதான் அதிகமாக வருமானம் வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கிணத்துக்கடவு தொகுதி விற்பனைக் கூடம் கூட இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; அங்கே அந்த அளவு வருமானம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்வதோடு, மைசூரிலே இருந்து வருகிற பஞ்சு பருத்தி முதலியனவற்றை அந்த கமிஷன் மண்டி மூலமாகத்தான் திருப்பூருக்கு கொண்டு வரப்பட்டு, வியாபாரிகளுக்கு அதன் மூலமாக பருத்தி விற்பனை செய்யப்படுகிறது. ஆகவே, அவர்கள் இடையூறாக இல்லை. விற்பனைக் கூடத்திற்கும், விவசாயிகளுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொண்டு, இதுபோன்ற தவறான தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் இருக்கிற காட்டன் மார்க்கெட்டிலே இருக்கிற அந்த

வியாபாரிகள் இடைத்தரகர்கள் தான்; அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று 10 ஆண்டுகளுக்கு முன்பு, விவசாயிகள் சங்கத்தின் சார்பிலே, நானே தலைமையேற்று போராட்டம் நடத்தி இருக்கிறேன். அந்தக் காலத்திலே மணி பாரதி என்ற ஒரு தனி அதிகாரி இருந்தபோது, அவரை வெளியேற்ற வேண்டுமென உத்தரவு கூட பிறப்பித்தார்கள். அவர்கள் நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெற்று, அரசாங்கம் அவர்களை 'Licensee' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, அவர்கள் தங்களை 'Lessee' என்று சொல்லி, நீதிமன்றத்தில் வாதாடி அவர்களை வெளியேற்ற முடியாமல் தடையுத்தரவு பெற்று விட்டார்கள். இன்றைக்கு அந்தத் தடையுத்தரவின் அடிப்படையிலேதான் (குறுக்கீடு) (மணியடிக்கப் பெற்றது).

பிற்பகல் 1.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி, உறுப்பினர் அவருடைய கருத்தைக் கூறுகிறார். அது தவறான கருத்தா? அப்படியென்றால் சொல்லுங்கள்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தலைமை தாங்கி நடத்திய போராட்டம் 10 ஆண்டுகளுக்கு முன் நடந்திருந்தாலும், அங்கிருக்கிற மணிபாரதி அவர்கள் உடந்தையாக இருந்தாலும், அந்த மணிபாரதி அன்றைக்கு எடுத்த நடவடிக்கை அரசாங்கத்தினுடைய நடவடிக்கை அல்ல. அது கொள்கைக்குப் புறம்பான நடவடிக்கை என்பதை அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இடைக்கால தடை பெற்றது மாத்திரமல்ல, அரசே அவருடைய நடைமுறையை ஏற்றுக் கொள்ளாததன் விளைவுதான் இன்றைக்குத் தொடர்ந்து வியாபாரிகள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்களை வியாபாரம் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. அன்றைக்குத் தனி அதிகாரியாக இருந்த மணிபாரதி அவர்கள் அரசினுடைய அலுவலர்தான். அவர் எடுத்த நடவடிக்கை சரியா தப்பா என்பது இன்று நம்முடைய விவாதத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை. அங்கே இருக்கின்றவர்கள், திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே குறைந்த வாடகையில் நான் இங்கே 'செஸ்' ஐப் பற்றி சொல்லவில்லை. அங்கே சதுரஅடி 5 ரூபாய் வாடகை என்று இருக்கின்றபோது, 5 பைசா கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அதிக வருமானம் வருவதற்கு அந்த வாடகையை உயர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக நடைபெறுகின்ற வியாபாரிகளுக்கு இடையூறாக இல்லாமல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி, நான் கொஞ்சம் அனுமதித்தேன். நீங்கள் திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 10 ஆண்டுக்காலமாக நடந்து கொண்டிருக்கிற உள்விவகாரங் களைப் பூராவும் இந்த பில்லில் பேசினீர்கள் என்றால் , அமைச்சரிடத்திலே இப்போது கைவசம் எந்த விவரமும் இருக்காது. இப்போது தனி அதிகாரி அவர்களுடைய பதவிக் காலம் நீட்டிக்கப்படலாம் அல்லது நீட்டிக்கப்படக் கூடாது என்கிற அளவுக்குத்தான் அவர்களாலே விளக்கம் சொல்ல முடியும். அதனால் அந்த அளவில் முடியுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, வாடகையை உயர்த்த வேண்டும் என்று கேட்டு, பல ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் இருந்து வருகின்ற விவசாயிகள் வெளியூர்களுக்கு எடுத்துச் செல்லுகின்ற காய்கறிகள் போன்றவற்றை அவர்கள் இடையிலேயே 'செஸ்' என்ற பெயரால் தடுத்து, நீண்ட நேரம் காக்க வைத்து, அதைக் கட்டக்கூடிய சூழ்நிலைமையெல்லாம் இருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அதை தடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தை சட்டப்பிரிவு 8-ன் படி தேர்தல் நடத்தி விற்பனைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்க வேண்டும். கோயம்புத்தூர் விற்பனைக் குழுவிற்கான தேர்தல் கடைசியாக 1975 ஆம் ஆண்டு நடத்தப்பட்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த விற்பனைக் குழு சில காலம் நல்ல முறையில் செயல்பட்டு வந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடத்திலே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் அவர்களால் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை சரிவரச் செயல்படுத்த முடியாத காரணத்தினால்தான் அரசாங்கம் அந்தக் குழுக்களைக் கலைத்து தனி அதிகாரிகளை நியமித்து அதைக் கைக்கொண்டது. அதற்குப் பிறகு, பல்வேறு வழக்குகள் இன்றைக்கு உயர்நீதி மன்றத்திலே இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அந்த விற்பனைக் குழுக்களுக்கு முறையாக அரசால் தேர்தல் நடத்த முடியவில்லை. வழக்குகள் பைசல் செய்யப்பட்ட பிறகு முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு என்பது ஒரு விவசாயி தன்னுடைய விளைநிலத்திலே உற்பத்தி செய்யக்கூடிய

பொருளை அவர் அங்காடியிலே கொண்டுவந்து விற்கின்றபோது அந்தப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நெறி முறைகளுக்குச் சில குந்தகங்கள் ஏற்பட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு அரசாங்கம் தனி அலுவலரை நியமனம் செய்து, தனி அலுவலர் கட்டுப்பாட்டின் கீழ், நிர்வாகத்தின் கீழ் இன்றைக்கு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய ஒரு உறுதியான நிலையை விவசாயிகள் கண்டு கொண்டிருக்கிறார்கள். திருப்பூர் மார்க்கெட் கமிட்டியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சா. பழனிசாமி குறிப்பிட்டதைப் போல அங்கே இருக்கக்கூடிய அந்த வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தக் கட்டிடங்களுக்கு அதிகப்படியான வாடகையை இந்த அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதன்பேரில் விவசாயிகளுடைய எந்தப் பொருளுக்கும் உரிய விலை கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த விற்பனைக் குழுக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேற்படி சட்டமுன்வடிவைப் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவு 1. மாண்புமிகு அமைச்சர் தன் திருத்தத்தை மொழியலாம்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

``In Clause 1, in sub-clause (1) *for* `Second Amendment Act, 1993' — ***substitute*** `Amendment Act, 1994',."

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 1, திருத்தப்பட்டபடி, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

" 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிப (முறைபடுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1993) திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

(ஈ) பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1994). மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1994), @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

@ 3-1-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.